


திருவண்ணாமலை மாவட்ட

# வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள்




வெளியீடு

**திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம்**

www.tiruvannamalaiheritage.org





## வரலாற்றுச் சிறப்புமிக்க **கோயில்கள்**

01. திருவண்ணாமலை
02. படைவீடு
03. தேவிகாபுரம்
04. நெடுங்குன்றம்
05. செய்யாறு
06. திருமலை
07. மாமண்டூர்
08. சீயமங்கலம்
09. மடம்
10. கூழமந்தல்
11. பிரம்மதேசம்

## காணத் தகுந்த **இடங்கள்**

01. சாத்தனூர் அணை
02. பர்வதமலை
03. ஜவ்வாதுமலை சுற்றுலா
04. ஏரிக்குப்பம் சனீஸ்வரர் ஆலயம்
05. தென்னாங்கூர் பாண்டுரங்கர் கோயில்,
06. கணிகிலுப்பை புத்தர் சிலை
07. குரங்கணில்முட்டம்
08. ஆவூர்

## வரலாற்று **நினைவுச் சின்னங்கள்**

01. சத்திய விஜய நகரம்
02. பூசிமலைக்குப்பம் அரண்மனை
03. வேட்டவலம்
04. வந்தவாசி கோட்டை
05. ஆரணி நினைவுத்தூண்
06. துர்கம் கோட்டை
07. மோட்டூர் தாய்க்கல்
08. செங்கம் நடுகற்கள்
09. பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் – ஜவ்வாதுமலை வாலியர்கூடம்





# அறிமுகம்

தமிழகத்தின் நுழைவாயில் என்றழைக்கப்படுகிற தொண்டைமண்டலத்தில் கிழக்குத்தொடர்ச்சி மலைத் தொடரின் வடக்குப்பகுதியில் அமைந்துள்ளது திருவண்ணாமலை மாவட்டம். இம்மாவட்டத்தில் தொல்பழங்காலம் முதல் மனித இனம் வாழ்ந்து வந்துள்ளதற்கான சுவடுகள் உள்ளன. ஜவ்வாது மலையில் உள்ள கிராமங்களில் புதிய கற் காலத்தைச் சேர்ந்த மனிதர்கள் கற்கருவிகள் தயாரித்த இடங்களும், பெருங்கற்கால மனிதர்கள் வாழ்ந்து மறைந்த இடத்தில் அமைக் கப்பட்ட நினைவுச்சின்னங்களும் உள்ளன. சங்ககால இலக்கியமான பத்துப்பாட்டில் ஒன்றான மலைப்படுகடாம் நூலின் பாட்டுடைத் தலைவன் நன்னன் சேய் நன்னன் ஆட்சி செய்த பகுதியான செங்கண்மா என்றழைக்கப்பட்ட செங்கம் திருவண்ணாமலை மாவட் டத்தில் அமைந்துள்ளது. இவன் ஆட்சிக்குப்பட்ட பகுதியில் அமைந் துள்ள நவிரமலை என்பதும் அப்பாட்டில் குறிப்பிடப்படும் சேயாறும் இம்மாவட்டத்தில் அமைந்து அணிசெய்கின்றன.

காஞ்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த பல்லவர்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் இம்மாவட்டம் அமைந் துள்ளதால் பல்லவர்கள் அமைத்த கோயில்கள், குடைவரைகள், கல் வெட்டுகள், போர்க்களங்கள் ஆகியன செய்யாறு மற்றும் வந்தவாசி பகுதியில் அமைந்துள்ளன. வந்தவாசி அருகிலுள்ள தெள்ளாரில் 9– ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற போர் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. மாமண்டூர் குடைவரைக் கோயிலும் சீயமங்கலம் குடைவரைக் கோயிலும் வரலாற்று சிறப்பானவை ஆகும். பல்லவர்களுக்குப் பின்ன மைந்த சோழர்களின் ஆட்சிக்காலத்தில் சோழர் கால கல்வெட்டுகள், கட்டடக்கலைகள், ஓவியம், நுண்கலைகள் ஆகியனவும் சிறப்பு பெற் றுள்ளன. பிரம்மதேசம் மற்றும் கூழமந்தல் கோயில்களும், திருவண் ணாமலை அண்ணாமலையார் கோயிலும் சோழர்காலக் கட்டடக் கலைக்குச் சான்றாகத் திகழ்கின்றன. சோழர் ஆட்சிக்குப்பின் சம்புவ ராயர்களின் ஆட்சி நடைபெற்றது.

விஜயநகர அரசகர்களது ஆட்சிக்காலத்தில் இப்பகுதியில் நெடிதுயர்ந்த கோபுரங்களும் மகாமண்டபங்களும், எழில்மிகுந்த சிற்பங்களும் ஓவியங்களும் கோயில்களில் இடம்பெற்றன. திருவண்

ணாமலை , தேவிகாபுரம், நெடுங்குன்றம் போன்ற கோயில்கள் கலைக் கோயில்களாக திகழ்கின்றன.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற ஆரணி போர், திருவண்ணாமலை போர், வந்தவாசி போர் ஆகியன முதன்மையான வரலாற்று நிகழ்வுகளாகும். ஆற்காடு நவாபிடமிருந்து கிழக்கிந்திய கம்பெனியாருக்கு அதிகார மாற்றம் ஏற்பட்ட பிறகு தொண்டை மண்ட லத்தில் பாலாறுக்கு வடக்கு அமைந்துள்ள பகுதி வடஆர்க்காடு என்றும் தெற்கே அமைந்துள்ள பகுதி தென் ஆர்க்காடு என்றும் பிரித் தனர். பிறகு நிர்வாக வசதிக்காக பல முறை மாவட்ட எல்லைகள் மறுசீர மைக்கப்பட்டது. **1989**–ஆம் ஆண்டு செப்டம்பர் **30**–ஆம் தேதி வட ஆற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு திருவண்ணா மலையைத் தலைமையிடமாகக் கொண்டு திருவண்ணாமலை சம்புவ ராயர் மாவட்டம் தோன்றியது. பின்பு இம்மாவட்டத்தின் பெயர் திருவண்ணாமலை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தற்போது இம்மாவட்டம் **6188** ச.கி.மீ. பரப்பளவும் **24,64,875** மக்கள் தொகையும் கொண்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று சிறப்பு மிக்க இடங் களைப்பற்றி சிறுநூலாக அறிமுகப்படுத்துவதில் திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம் பெருமை கொள்கிறது.

இவண்,

**திருவண்ணாமலை மாவட்ட**
**வரலாற்று ஆய்வு நடுவம்**

பதிவு எண் 163 / 2017

**Tiruvannamalai District Centre for Historical Research**

தொடர்பிற்கு : 94886 57729 // 90475 78421 // 94482 10463

e-mail : tvmchr@gmail.com facebook.com/tvmalaichr
www.tiruvannamalaiheritage.org



வரலாற்றுச் சிறப்புமிக்க

# கோயில்கள்

திருவண்ணாமலை

## அண்ணாமலையார் திருக்கோயில்

ஆன்மிகத்திலும் வரலாற்றிலும் புகழ்பெற்ற திருவண்ணாமலை. பஞ்ச பூதத்தலங்களில் ஒன்றாகவும் சைவக்குரவர்களால் பாடல் பெற்ற தலமாகவும் சிறப்புபெற்ற ஊராகும். இங்குள்ள அண்ணாமலையார் கோயில் சுமார் 1100 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு தொடர்ந்து சோழர்கள், பாண்டியர்கள், சம்புவ ராயர்கள், போசளர்கள், விஜயநகர அரசர்கள், நாயக்க மன்னர்கள், நகரத்தார்கள், குறுநில மன்னர்கள், ஜமின்தார்கள் என பல்வேறு அரசர்களின் பங்களிப்பு இக்கோயில் கட்டடக்கலை வரலாற்றில் உள்ளன. இக்கோயிலில் ஆயிரக் கணக்கான சிற்பங்களும், 430 கல்வெட்டுகளும் உள்ளன. இக்கோயிலில் 100க்கும் மேற்பட்ட சந்நிதிகள் உள்ளன. இறைஉருவங்கள், செப்புத்திருமேனிகள், ஓவியங்கள், அழகிய திருச்சுற்றுகள், தீர்த்தக்குளங்கள், ஆயிரங்கால் மண்டபம், வானுயர்ந்த கோபுரங்கள் இக்கோயிலின் சிறப்புகள் ஆகும். 25 ஏக்கர் பரப்பளவில் மிகப்பிரமாண்டமாய் அமைந்துள்ளது இத்திருக்கோயில். கிருஷ்ணதேவராயர் கட்டிய கிழக்கு ராஜகோபுரம் 217 அடி உயரம், தமிழ் நாட்டில் இரண்டாவது உயரமான கோபுரம் ஆகும். இவை தவிர வல்லாள மகாராஜா கோபுரம், கிளிக்கோபுரம், அம்மணிஅம்மன் கோபுரம் ஆகியன வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கோபுரங்களாகும். இக்கோயிலில் அருள்மிகு அண்ணாமலையார் உடனமர் உண்ணாமுலை மூலவராக அமைந்துள்ளனர். மலைவலப்பாதையில் அமைந்துள்ள எழுத்து மண்டபம் ஓவியக் கூடமாகத் திகழ்கிறது. இவை தவிர கந்தாஸ்ரமம், பவழக்குன்று, ரமணாஸ்ரமம், மலைவலப்பாதை, அஷ்டலிங்கங்கள் ஆகியன பார்க்கத் தகுந்த இடங்களாகும்.

படைவீடு

## கோயில்கள்



படைவீட்டைத் தலைமையிடமாகக் கொண்டு 13 மற்றும் 14–ஆம் நூற்றாண்டில் சம்புவராயர்கள் ஆட்சிபுரிந்தனர். இவர்கள் ஆட்சிப் பகுதி தற்போதைய வேலூர், காஞ்சிபுரம், விழுப்புரம் மாவட்டங்கள் வரை பரவியிருந்தது. விஜயநகர பேரரசர் குமாரகம்பணாவின் படையெடுப்பின்மூலம் சம்புவராயர்கள் ஆட்சி முடிவுக்கு வந்தது. சம்புவராயர்களைப்பற்றி அறிய 100–க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் துணை புரிகின்றன. இவ்வூரில் உள்ள கோட்டைமலை

வரதராஜர் கோயில், ரோணுகாம்பாள் கோயில், இராமச்சந்திரர் கோயில், சோமநாதர் கோயில், அம்மையப்ப ஈஸ்வரர் கோயில் ஆகியன புகழ்பெற்ற கோயில்களாகும். 1993–ஆம் ஆண்டு செய்யப்பட்ட அகழாய்வில் கோட்டை சிதைவு எச்சங்கள், ஆபரணங்கள், சிற்பங்கள் ஆகியன கண்டெடுக்கப்பட்டன. போளூர் – வேலூர் சாலையில் சந்தவாசல் ஊரிலிருந்து மேற்கே 8 கி.மீ தொலைவில் ஜவ்வாதுமலை அடிவாரத்தில் இயற்கை அரணோடு இவ்வூர் அமைந்துள்ளது.

தேவிகாபுரம்


## பெரியநாயகி அம்மன் கோயில்



விஜயநகரப் பேரரசு காலத்தில் கட்டப்பட்ட பெரியநாயகி அம்மன் கோயிலும் மலைமீதுள்ள பொன்மலைநாதர் ஆலயமும் மிகவும் புகழ்வாய்ந்தவை. இக்கோயில்களில் ஆயிரக்கணக்கான சிற்பங்களும், 60 கல்வெட்டுகளும் உள்ளன. கல் வெட்டுகளில் இவ்வூர் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து பல்குன்றக் கோட்டத்து மேல்குன்ற நாட்டு முருகமங்கலம் பற்றைச் சார்ந்த தேவக்காபுரம் என்று குறிக் கப்படுகிறது. விஜயநகர பேரரசர் காலத்தில் புகழ்பெற்ற வணிக நகராகவும், ஆன்மிக தலமாகவும் அக்காலத்தில் ஊரின் நிர்வாக அமைப்பாகவும் செயல்பட்டுள்ளது. பெரியநாயகி அம்மன் கோயில் மதில் சுவர், கல்யாணமண்டபம், மகா மண்டபம், கருவறை ஆகிய இடங் களில் சைவ, வைணவக் கதைச் சிற்பங்கள் எழிலுற அமைக்கப்பட்டுள்ளன. பெரியபுராண கதைச்சிற்பங்கள், விஷ்ணுவின் அவதாரச்சிற்பங்கள், தலவரலாற்றுச்சிற்பங்கள் போன் றவை காணத்தகுந்தவை ஆகும். இக்கோயிலுக்குப் பின்புறம் அமைந்துள்ள திருகா மேஸ்வரர் சமதே கோகிலாம்பாள் ஆலயமும் அதன் அருகில் சுமார் 500 அடி உயர மலையில் அமைந்துள்ள பொன்மலைநாதர் திருக்கோயிலும் சிற்ப எழில் கொண்ட கோயில்களாகும். இவ்வூர் போளூர் சேத்துப்பட்டு சாலையில் 14 கி.மீ.தொலைவில் உள்ளது.

நெடுங்குன்றம்

## இராமச்சந்திர பெருமாள் திருக்கோயில்



திருவண்ணாமலை மாவட்டத்தில் புகழ்பெற்ற யோக இராமச்சந்திர பெருமாள் திருக்கோயில் நெடுங்குன்றத்தில் அமைந் துள்ளது. பெருமாள் இடது கையை இதயத் தின்மேல் வைத்தவாறும் அவருக்கு எதி ரில் அனுமன் வேத மந்திரத்தைப் படித் துக்காட்டுவது மாதிரியும் சிற்பங்கள் அமைந்துள்ளன. மிகநேர்த்தியான வாயிற்காவலர்களின் சிற்பங்கள் அமைந்துள்ளன. இதனையடுத்து

செங்கமலவல்லி தாயார் சந்நிதி அமைந்துள்ளது. இதன் எதிரில் அமைந்துள்ள முகமண்டபத்தில் இராமாயண, தசாவதார சிற்பங்கள், கிருஷ்ணலீலை, கிருஷ்ணதேவராயர் சிற்பம் (கிருஷ்ண தேவராயருக்குத் தனிச்சிற்பம் அமைந்துள்ள குறிப்பிடத்தக்கதாகும்) அமைந்துள்ளன. விஜயநகர பேரரசர்கள் காலத்தில் கட்டப்பெற்ற இக்கோயில் அழகிய சிற்ப வேலைப்பாடுகளோடு வரலாற்றுச் சிறப்பு மிக்க கல்வெட்டுகளும் அமைந்துள்ளன. சேத்துப்பட்டு – வந்தவாசி நெடுஞ்சாலையில் சேத்துப்பட்டில் இருந்து 5 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது.

### செய்யாறு
## வேதபுரீஸ்வரர் கோயில்



செய்யாற்றின் தென்கரையில் அமைந்துள்ள நகரம், திருஞானசம்பந்தரால் பாடல்பெற்ற சைவத்தலம், இத்தலத்தின் மூலவர் வேதபுரீசுவரர், தாயார் இளமுலையம்பிகை. ஞானசம்பந்தரால் ஆண் பனையை பெண் பனையாக மாற்றிய தலம் என்பர். வரலாற்றுச்சிறப்பு மிக்க கல்வெட்டுகளும், கலை கட்டடக்கலையில் முக்கியத்துவம் பெற்ற திருக்கோயிலாகும்.


### திருமலை
## சமணர் ஆலயம்



இம்மாவட்டத்தில் அமைந்துள்ள திருமலை புகழ்பெற்ற சமணத் திருத்தலமாகும், 22 வது சமணத்தீர்த்தங்கரரான நேமிநாதரின் 18 அடி உயர உருவச் சிலையும் திருப்பாதங்களும் குந்தவை நாச்சியாரின் கல்வெட்டும் இக்குன்றில் அமைந்துள்ளன. குன்றிற்குக்கீழ் அமைந்துள்ள மகாவீரர் ஆலயத்தில் 5 அடி உயர சுதைச்சிற்பம், தீர்த்தங்கரர்களின் உருவங்கள், புகழ்பெற்ற பாறை ஓவியங்கள், கல்வெட்டுகள் அமைந்துள்ளன. இக்கோயில். மனதிற்கு இனிமையான, காற்றோட்டமான இடத்தில் அமைந்துள்ளது இக்கோயில், போளூர் ஆரணி வழியில் வடமாதிமங்கலத்தில் இருந்தும், போளூர் தேவிகாபுரம் வழியில் மட்டப்பிறையூர் அல்லது கொம்மனந்தல் வழியாகவும் செல்லலாம்.

### மாமண்டூர்
## குடைவரைக் கோயில்

தமிழகத்தில் அமைந்துள்ள பெரிய குடைவரைகளுள் ஒன்றாக கூறப்படுகிறது மாமண்டூர் குடைவரையாகும். நரசமங்கலம் – மாமண்டூர் கிராமத்தில் உள்ள மலைக்குன்றில் 4 குடைவரைகோயில்கள் அமைந்துள்ளன. இக்கோயில்கள் மகேந்திரவர்மனும் அவரது பின்வந்த அரசர்களாலும் அமைக்கப்பட்டன.



வலதுகோடியில் அமைந்துள்ளது முதல் மற்றும் இரண்டாம் குடைவரை முறையே விஷ்ணுவிற்கும் சிவனுக்கும் அமைக்கப் பட்டுள்ளது. குன்றின் மீது அமைக்கப்பட் டுள்ள 3–வது குடைவரை கருவறையில் இறை உருவங்கள் இல்லை. தென்கோடி யில் அமைக்கப்பட்டுள்ள 4வது குடைவரை முற்றுபெறாததாகும். வரலாற்றுச்சிறப்பு மிக்க மகேந்திரவர்ம பல்லவனின் பல பட்டப் பெயர்களை கூறும் பல்லவ கிரந்த கல்வெ ட்டு உள்ளது, இம்மலைக்குன்றின் பின்புறம் அமைந்துள்ள சித்திரமேகத்தடாகத்தைப் பற்றிய குறிப்புள்ள 10 ஆம் நூற்றாண்டு கல் வெட்டு என வரலாற்றுப்பெட்டகமாக அமைந்துள்ளது இக்குன்றின் மீது வாலீஸ்வரர் கோயிலும், பைரவர் கோயிலும் அமைந் துள்ளது. குன்றின் வடகோடியில் சமணர் படுக்கையும் அது அமைந்துள்ள பாறையின் மீது திருவண்ணாமலை மாவட்டத்தில் மிகப்பழைய கி.பி. முதலாம் நூற்றாண்டு தமிழி கல் வெட்டும் அமைந்துள்ளது. வந்தவாசி காஞ்சிபுரம் சாலையில் நரசமங்கலம் கிராமத்தில் இருந்து மேற்கே 2 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது.

### சீயமங்கலம்
## குடைவரைக் கோயில்



அவனிபாஜன பல்லவனேஸ் வரம், சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்படு கின்ற குடைவரைக்கோயில் பல்ல வர் காலத்தில் குடைவரையாக மட் டும் இருந்தது. பிற்கால மன்னர் களால் அர்த்தமண்டபம், முக மண் டபம், கோபுரம் என விரிவுபடுத்தப் பட்டுள்ளது. இயற்கையான சூழ லில் அமைந்துள்ள இக்கோயில் இறைவனின் பெயர் தூணாண் டார் ஆகும். இக்கோயில் தூணில் உள்ள நடராஜர் சிற்பம் தமிழகத் தில் முதல் நடராஜர் உருவம் என்று ஆய்வாளர்களால் குறிக்கப்பெறு கிறது. 30–க்கும் மேற்பட்ட கல் வெட்டுகளில் அரிய வரலாற்றுத்தகவல்களைக் கொண்டுள்ளன. இக்கோயிலுக்கு எதிரில் உள்ள குன்றில் சமணப் படுக்கையும் சிற்பமும் அமைந்துள்ளன. இக்கோயில். தேசூரிலிருந்து மேற்கே 2 கி.மி. தொலைவில் உள்ளது சீயமங்கலம்.

மடம்

## தடாகபுரீஸ்வரர் ஆலயம்



சோழர்காலத்தில் கட்டப்பெற்ற இக்கோயிலின் மூலவர் பெயர் தடாகபுரிஸ்வரர் ஆகும். ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து பல் குன்றக்கோட்டத்து தென்னாற்றூர் நாட்டுக் குளத்தூர் என இக்கோயில் கல்வெட்டுகள் இவ்வூரைக் குறிக்கின்றன. இக்கோயில் இறைவன் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி.1072) திரு. அக்கினீஸ்வரமுடையார் என்றும், பின்னர் இரண்டாம் இராஜராஜன் காலம் முதல் (கி.பி. 1166) குளந்தை ஆண்டார் என்றும் தற்போது தடாகபுரிஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார். இவ்வூரில் உள்ள இராஜக்கல் பாறை, சறுக்கும் பாறை ஆகிய இடங்களில் உள்ள கல்வெட்டுகளில் ஊர்நிர்வாகம், கோயில் நிலதானம் உள்ளிட்ட பல தகவல்களைக் கொண்டுள்ளன. இக்கோயில் இராஜ கோபுரம் விஜயநகர பேரரசர்கள் சம்புவராயர்களை வென்றதன் நினைவாக எழுப்பப்பட்ட கோபுரம் ஆகும். இக்கோயிலில் ஆயிரம் லிங்கங்கள் கொண்ட சிறப்புமிக்க சகஸ்கர லிங்கம், கல்யாண மண்டபம், சிற்பங்கள், கல்வெட்டுகள் என அற்புதக் கோயிலாக ஊரின் நடுவே அமைந்துள்ளது. இது சேத்துப்பட்டு – வந்தவாசி சாலையில் ஏந்தல் கூட்டுரோட்டிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது.

கூழமந்தல்

## கங்கை கொண்ட சோழீஸ்வரர் கோயில்




இராஜேந்திர சோழன் ஆட்சிக்காலத்தில் அவரது ஞானகுருவான ஈசான சிவ பண்டிதரால் கட்டப்பெற்ற அழகிய கற்றளி கூழமந்தல் கோயிலாகும். கல்வெட்டுகளில் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து காழியூர் கோட்டத்து ஆக்கூர் ஊர் அடுத்த பாகூர் நாட்டு நகரம் விக்ரமசோழ கங்கைகொண்ட சோழீஸ்வரம் என்று குறிப்பிடுகிறது. கிழக்கு பார்த்த கோயில் இரண்டு தளமுடைய அழகிய ஸ்ரீவிமானமும் அதனையடுத்த அர்த்த மண்டபமும் அடுத்தாற்போல் முகமண்டபத்துடன் அமைந்துள்ளது. இங்குள்ள சிவனின் பெயர் கங்கை கொண்ட சோழீஸ்வரர் ஆகும். கருங்கற்களால் கட்டப்பெற்ற இக்கோயில் சோழர்கால கட்டுமானத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டு. அழகிய விமானம், சிற்பங்கள், கல்வெட்டுத்தகவல்கள் என கண்ணைக்கவரும் வடிவில் அமைந்துள்ளது. தமிழக தொல்லியல் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. வந்தவாசி – காஞ்சிபுரம் நெடுஞ்சாலையில் கூழமந்தல் கிராமத்தில் கிழக்கே 500 மீ தொலைவில் அமைந்துள்ளது.

## பிரம்மதேசம்
# சந்திரமௌலீஸ்வரர் கோயில்



வெம்பாக்கம் வட்டம் பிரம்மதேசம் ஊரில் பிற்காலப் பல்லவ மன்னனால் மணற்கல்லால் கட்டப்பட்ட 3 தளங்களுடைய சந்திரமௌலீஸ்வரர் என்ற அழகிய கற்றளி அமைந்துள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூரின் பெயர் ராஜமல்லச் சதுர்வேதிமங்கலம், கரைக் கோட்டு பிரம்மதேயம் என்றும் இக்கோயில் இறைவரை திருப்போந்தை ஆண்டார் என்றும் குறிக்கப்பெறுகின்றது. போந்தை என்றால் பனைமரம். பிரம்மதேசம் என்றால் நான்கு வேதங்களைக் கற்ற அந்தணர்களுக்கு தானமாக அளிக்கப்பட்ட ஊர் ஆகும். இவ்வூரில் பெருங்குறி மகாசபை என்ற மக்கள் சபை இருந்தது என்றும் இச்சபை இவ்வூரில் நிலதானம் உள்ளிட்ட முக்கிய முடிவுகளை எடுக்கும் அமைப்பாகவும் செயல்பட்டுள்ளது. முதலாம் இராஜேந்திர சோழன் இறந்த பின்னர் உடன்கட்டை ஏறிய மன்னரின் தேவியார் வீரமகா தேவியார் நினைவாக தாகம் தீர்க்க வேண்டி தண்ணீர் பந்தல் அமைத்த செய்திகள், இவ்வூரில் செயல்பட்ட மடங்கள், விழாக்கள் உள்ளிட்ட பல அரிய தகவல்களை இக்கோயிலிலுள்ள 90–க்கும் மேற்பட்ட கல்வெட்டுகளால் அறியலாம். இவ்வூரில் அமைந்துள்ள மற்றொரு சிவாலயம் ருத்திர கோட்டீஸ்வர் ஆலயம் ஆகும், இக்கோயிலுக்கு இரண்டாம் குலோத்துங்கன் நேரடியாக வந்து நில தானங்களைச் செய்தவிவரம் இக்கோயில் கல்வெட்டுகளில் காணலாம். வெம்பாக்கம் வட்டம் காஞ்சிபுரம் – ஆற்காடு நெடுஞ்சாலையில் நாட்டேரி என்ற கிராமத்தின் அருகில் பிரம்மதேசத்தில் இக்கோயில் அமைந்துள்ளது.



## சத்திய விஜய நகரம்



மராத்திய மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்ட சத்திய விஜய நகரம் அரண்மனை பிற்காலத்தில் அவர்கள் வழிவந்தவர்களால் ஆளப்பட்டு வந்தது. சீனுவாசராவ் சாகேப் என்பவரால் இவ்வரண்மனை கட்டப்பட்டது. இதில் வாழ்ந்த ஜாகிர்தார்கள் அக்காலத்தில் இப்பகுதியின் தலைவராக பல கிராமங்களை கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டிருந்தனர். இங்கு இவர்கள் கட்டிய அழகிய அரண்மனை தற்போது அரசின் பயிற்சி மையமாக திகழ்கிறது.

## பூசிமலைக்குப்பம்



ஆரணி திருமலா சாகிப் ஜாகிர் என்பவர் தனது மனைவிக்கு ஜெர்மனிய கலை நுட்பத்துடன் கட்டிய கண்ணாடி மாளிகை பூசிமலைக்குப்பம் என்ற இடத்தில் உள்ளது. இது ஆரணி – கண்ணமங்கலம் சாலையில் அமைந்துள்ளது.

## வேட்டவலம்



இவ்வூரில் பண்டைய கால மக்கள் வாழ்ந்ததற்கான தொல்லியல் சுவடுகளும், பாறை ஓவியங்களும் கிடைத்துள்ளன. இவ்வூரில் அமைந்துள்ள அகத்திஸ்வரர் கோயிலின் கருவறை மேற்கு நோக்கி அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வூரில் உள்ள ஜமீன் மாளிகை, குளம், ஜமீன் சிறப்பு மிக்க இடங்களாகும். இவ்வூருக்கு அருகில் செத்தவரை, கீழ்வாலை ஓவியங்களும் அமைந்துள்ளது. திருவண்ணாமலை – விழுப்புரம் நெடுஞ் சாலையில் அமைந்துள்ளது.

## வந்தவாசி



இந்தியாவில் ஆட்சியைப் பிடிப்பதற்கு ஆங்கிலேய பிரெஞ்ச் கம்பெனிகளுக்குள் நடைபெற்ற போர் வரலாற்றுச் சிறப்பு மிக்க வந்தவாசி போர் ஆகும். 1760 ஆம் ஆண்டு நடைபெற்ற இப்போரில் வந்தவாசி வீரர் என்று

அழைக்கப்படுகின்ற சர் அயர்கூட் பிரஞ்ச் தளபதி கௌண்டி லாலியை வென்றதும், 1000–க்கும் மேற்பட்டார் போரில் இறந்த இடமும்தான், இன்று எந்த சுவடுகளும் இல்லாமல் சிதைந்து போயிருக்கின்ற வந்தவாசி கோட்டை, சுமார் ஒரு கி.மீ. சதுர பரப்பில் அமைந்துள்ள இக்கோட்டையில் சில சிதிலங்கள் மட்டுமே காணக்கிடைக்கின்றன. வரலாற்றுச் சிறப்பு மிக்க இக்கோட்டை வந்தவாசி பழைய பேருந்து நிலையத்தின் அருகில் உள்ளது.



## ஆரணி

பட்டுக்கும் அரிசிக்கும் புகழ்பெற்ற ஆரணி வரலாற்றிலும் புகழ் பெற்றுள்ளது. இவ்வூரில் மராட்டியர், ஹைதர்அலி, நவாபுகள், ஆங்கிலேயர்கள் எனப் பலரால் போர் நடைபெற்ற இடமாமகும். ஆரணி கோட்டை கைலாசநாதர் கோயிலும், கோட்டை மைதானத்தில் ஆங்கிலேயப் போர் படைத்தளபதி ராபர்ட் கெல்லீஸ் என்பவரின் நினைவாக அமைக்கப் பெற்ற பெரிய ஸ்தூபி வரலாற்றுச்சிறப்பு மிக்கதாகும்.

## துர்க்கம் கோட்டை



செஞ்சி நாயக்கர்களால் கட்டப்பட்ட கோட்டை, தானியக் களஞ்சியமும், கோட்டை சுவர்களும் உள்ளன.

## மோட்டூர்




தமிழகத்தின் தொன்மையான வழிபாட்டில் உள்ள மனித உருவொத்த சிலை (Anthropomorphic Figure) இங்கு அமைந்துள்ள பெருங் கற்கால நினைவுச்சின்னங்கள் அருகே அமைந் துள்ளது. சுமார் 10 அடி உயரம் 8 அடி அகலம் உள்ள இச்சிலையை அப்பகுதி மக்கள் கூத்தாண் டவர் என்றும் தாய் தெய்வம் என்றும் அழைக் கின்றனர்.

## செங்கம் நடுகற்கள்

தமிழகத்தில் தனிப்பெறும் சிறப்பு பெற்றவை செங்கம் நடுகற்கள், இவை தற்போதைய செங்கம், தண்டராம்பட்டு வட்டத்தில் 50–க்கும் மேற்பட்ட இடங்களில் காணப் படுகின்றன. ஆறாம் நூற்றாண்டு முதல் 12–ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச்

சேர்ந்த நடுகற்கள் காணப்படுகின்றன. இந்நடு கற்கள் வட்டெழுத்துத்தமிழ், தொல் குடிமக்கள், வேளிர்கள், கால்நடைகள், சமூக அமைப்பு போன்ற வற்றைப் பற்றியறிய மிக முக் கியச் சான்றுகளாக அமைந் துள்ளன.





## பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள்








ஜவ்வாதுமலை மேல்சேப்பிளி என்ற இடத்தில் 100–க்கும் மேற்பட்ட பெருங்கற் கால சினைவுச் சின் னங்கள் அமைந்துள் ளன. இதை வாலியர் குகைகள் என்று அழைக்கின்றனர்.

இதன் காலம் சுமார் 3000 ஆண்டுகள் ஆகும். இம்மலையில் உள்ள பாதிரி என்ற கிரா மத்தில் சுமார் 5000 ஆண்டு பழமையான புதிய கற்கால மனி தர்கள் வாழ்ந்த சுவடுகளும் கற்கருவிகளும் கிடைத்துள்ளன. இவை தவிர தொன்மையான நடுகற்களும், கோயில்களும் இம் மலையில் காணப்படுகின்றன.




வீரணம், தொண்டமானூர், சம்பந்தனூர், தொரப்பாடி, தான கவுண்டன்புதூர் உள்ளிட்ட பல இடங்களில் பெருங்கற்கால நினைவுச்சின்னங்களான கல் வட்டங்கள், கல்பதுக்கைகள் காணப்படுகின்றன.










# காணத் தகுந்த இடங்கள்

## சாத்தனூர் அணை

சாத்தனூர் அணை 1957 ஆம் ஆண்டு தென்பெண்ணையாற்றின் குறுக்கே கட்டப் பட்டது. இவ்வணையின் மொத்த நீர் கொள்ளளவு உயரம் 119 அடியாகும். தமிழகத்தில் பெரிய அணைகளில் முக்கியமானதாகும். பூங்கா மற்றும் முதலைப் பண்ணை காணத்தகுந்த இடங் களாகும். திருவண்ணாமலையில் இருந்து 30 கி.மீ. தூரத்திலும் செங்கத்திலிருந்து 24 கி.மீ. தூரத்திலும் உள்ளது.






## பர்வத மலை

சங்க காலத்தில் நன்னன் சேய் நன்னன் ஆண்ட பகுதியான நவிர மலை என்பதே தற்போதைய பர்வதமலை என்று வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள், ஜவ்வாது மலைத்தொடரில் அமைந்துள்ள இம்மலையின் மீது அபிதகுஜாம்பாள் உடனமர் மல்லிகார் சுனர் கோயில் அமைந்துள்ளது. போளூரிலிருந்து 25 கி.மீ தூரமும் திருவண்ணாமலையில் இருந்து 30 கி.மீ. தூரத்திலும் உள்ளது.

## ஜவ்வாது மலை



கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஓர் அங்கமான ஜவ்வாதுமலை சுமார் 260 ச.கி.மீ. பரப்பளவில் அமைந் துள்ளது. இம்மலையில் பாதிரி என்ற ஊரில் புதிய கற்கால மக்கள் வாழ்ந்த தடயங்களும் கீழ்செப்பிளி, மண்டபாறை ஆகிய இடங்களில் பெருங்கற்கால ஈமச் சின்னங்களும் உள்ளன. பல்லவர் காலம் முதல் நாயக்கர் காலம் வரையிலான காலத்து பல்வேறு நடு கற்கள் இம்மலையில் உள்ளன. சோழர் காலத்தில் கட்டப்பெற்ற கோவிலூர் சிவன் கோயில் முக்கியத் துவம் வாய்ந்ததாகும். இங்குள்ள மக்கள் தினை, சாமை, வரகு போன்ற சிறுதானியங்கள் பயிரிடுகின்றனர். தேன், மிளகு, பழவகைகளும் இம்மலை வாழ்மக்களின் வாழ்வாதாரமாகத் திகழ்கின்றன. பீமன் அருவி, படகு குழாம், பூங்கா, கோவிலூர் சிவன் கோயில், வைனுபாப்பு தொலைநோக்கி மையம், அமிர்தி வன விலங்கு சரணாலயம் ஆகியன முக்கிய சுற்றுலா இடங்கள் ஆகும். போளூர், திருப்பத்தூர் ஆகிய ஊர்களிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன.

ஏரிக்குப்பம்

## சனீஸ்வரர் கோயில்



ஆரணி படவேடு சாலையில் ஏரிக்குப்பம் என்ற கிராமத்தில் அமைந்துள்ளது எந்திர சனீஸ்வரர் ஆலயம். சனிபகவானுக்கு அமைக்கப் பட்ட நவக்கிரக தலங்களுள் ஒன்றாகும்.

தென்னாங்கூர்

## பாண்டுரங்கன் கோயில்



வட இந்திய பாணியில் நாகர அமைப்பில் அமைக்கப்பட்டுள்ள ரகுமாயி சமேத பாண்டு ரங்கன் கோயில் தென்னாங்கூர் கிராமத்தில் அமைந்துள்ளது. இவ்வூர் வந்தவாசி – காஞ்சிபுரம் நெடுஞ்சாலையில் வந்தவாசியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

கணிகிலுப்பை

## புத்தர்



வெம்பாக்கம் வட்டத்தில் அமைந்துள்ள கணிகிலுப்பை கிராமத்தில் அமைந்துள்ள பிள்ளையார் கோயிலில் 10–ஆம் நூற்றாண் டைச் சேர்ந்த புத்தர் சிலை காணப்படுகிறது. இச்சிலை அமைந்துள்ள கோயிலுக்கு எதிரே கி.பி. 14–ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த புத்தஸ்ரீ என்று பொறிக்கப்பட்டுள்ள புத்த ஸ்தூபி ஒன்றும் அமைந்துள்ளது. இவ்வூரில் புத்த மதம் வழிபாட்டில் இருந்தமைக்கான சான்றாக இவை திகழ்கின்றன. வந்தவாசி – காஞ்சிபுரம் நெடுஞ்சாலை, தூசி கிராமத்திலிருந்து 5 கி.மி. தொலைவில் அமைந்துள்ளது.

குரங்கணில்முட்டம்

## அருள்மிகு வாலிஸ்வரர் திருக்கோயில்



தொண்டைநாட்டு பாடல் பெற்ற தலங்களில் 6வதாக வளையம்மை உட னமர் கொய்யாமலர் நாதர் திருக்கோ யில் அமைந்துள்ளது. வாலி குரங்கு வடி விலும், இந்திரன் அணில் வடிவிலும், எமன் முட்டம் (காகம்) வடிவிலும் இறை வனை வழிபட்ட தலம் என்பதால் இவ்வூ ருக்கு குரங்கணில்முட்டம் என்று பெயர் வழங்கலாயிற்று என்பர். இக்கோயில் அருகே பல்லவர் குடைவரை ஒன்றும் உள்ளது. வந்தவாசி காஞ்சிபுரம் சாலையில் தூசி கிராமத்தில் இருந்து 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.



## ஆவூர்

வேட்டவலம் – திருவண்ணாமலை சாலையில் அமைந்துள்ள ஆவூரில் புகழ்பெற்ற சிவாலயமும், குடைவரைக்கோயிலாக பெருமாள் கோயிலும் அமை–ந்துள்ளது. குடைவரைக் கோயிலின் திருச்சுற்றுகள் மிகநேர்த்தியாக அழகாக கண்ணைக்கவரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. மிகச்சிறிய குடைவரையானாலும், பிற்காலத்தில் இக்கோயில் விரிவுபடுத்தப்பட்டு, பின் படையெடுப்பால் சிதைக்கப்பட்டுள்ளது. இவ்வூரில் உள்ள அகத்தீஸ்வரர் கோயிலும் சிற்ப வேலைப்பாடுகளுக்கு புகழ் பெற்றது. சிதிலமடைந்த இக்கோயில் புனரமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது.


# விஸ்டம் மகளிர்
## கலை & அறிவியல் கல்லூரி

KNOWLEDGE TRIUMPHS TO WISDOM

தமிழக அரசாணை எண் : Ms. 118 Dated 11.05.2017
திருவள்ளுவர் பல்கலைக்கழக இணைப்பு பெற்றது

வந்தவாசி நெடுஞ்சாலை, அனக்காவூர் – 604 401. செய்யாறு தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம்.
Cell : **95003 19965, 91599 32070** E-mail : wisdomcollege2010@gmail.com

### இளங்கலை பாடப் பிரிவுகள்
- B.A., ஆங்கிலம்
- B.Sc., கணிதம்
- B.Sc., வேதியியல்
- B.Sc., கணினி அறிவியல்
- B.Com., வணிகவியல்
- B.B.A., வணிக நிர்வாகவியல்
- B.C.A., கணினி பயன்பாட்டியல்

### முதுகலை பாடப் பிரிவுகள்
- M.A., ஆங்கிலம்
- M.Com., வணிகவியல்

### சிறப்பு அம்சங்கள்
- இயற்கை சூழலில் அமைந்த இனிய கல்லூரி வளாகம்
- பெண்களுக்கு மிகப் பாதுகாப்பான சூழ்நிலை
- அனுபவமும், திறமையும் மிக்க பேராசிரியர்கள்
- அதிநவீன அறிவியல் மற்றும் கணினி ஆய்வுக்கூடம்
- சீர்மிகு நூலக வசதி, பன்முக வளர்ச்சிக்கான பயிற்சி வகுப்புகள்
- யோகா, குங்பு, கராத்தே மற்றும் உடற்கல்வி பயிற்சிகள்
- ஆங்கில மொழியில் பேச கூடுதல் சிறப்புப் பயிற்சிகள்
- அரசு உதவித் தொகை மற்றும் கல்விக்கடன் ஏற்பாடுகள்
- வேலைவாய்ப்பிற்கான சிறப்பு ஏற்பாடுகள் / வளாக நேர்காணல்
- ஆரோக்கியமான உணவுடன் கூடிய விடுதி வசதி
- அனைத்து கிராமங்களுக்கும் பேருந்து வசதிகள்



- Printed @ **SUBAM** // Tiruvannamalai
- Designed @ **EXCEL** // Polur